# ''எந்த அதிகாரத்தினால்?''

*ஒரு நாள் இயேசு ஆலயத்தில் போதித்துக் கொண்டிருக்கையில், பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் அவரிடத்தில் வந்து, "நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?" என்று கேட்டார்கள் (மத். 21:23). இயேசு அவர்களின் கேள்விக்குப் பதில் அளிக்க மறுத்து விட்டார்; அவர்களின் நோக்கம் தீயதென்று அவர் அறிந்தார். இருப்பினும் இது நல்லதொரு கேள்வியாகவே உள்ளது, மற்ற வேளைகளில் இயேசு இதற்குப் பதில் அளித்தார். அவருடைய போதனை அவருடைய பிதாவினிடத்திலிருந்து வந்ததென்று அவர் அறிவித்தார்.*

*இன்றைய நாட்களில், மதரீதியான நடைமுறை ஒவ்வொன்றைப் பற்றியும் இதே போன்ற கேள்விகளைக் கேட்பது ஒரு நல்ல கருத்து ஆகும். ஒரே ஒரு பதில் மட்டுமே நம்முடைய பிதாவைப் பிரியப்படுத்த முடியும்: ''கிறிஸ்துவின் அதிகாரத்தினால்.'' இயேசுவுக்குச் ''சகல அதிகாரமும்'' கொடுக்கப்பட்டுள்ளது (மத். 28:18). அவர் சபைக்குத் தலையாய் இருக்கின்றார் (எபே. 1:22, 23). இந்நாட்களில் தேவன் தமது குமாரன் மூலமாக நம்மிடத்தில் பேசுகின்றார் (எபி. 1:2). மறுரூபமடைதலின் போது தேவன் "இவருக்குச் செவிகொடுங்கள்" (மத். 17:5; மாற். 9:7; லூக். 9:35) என்று கூறுகையில் இந்த உண்மையானது வலியுறுத்தப்பட்டது.*

*கிறிஸ்துவின் சபைகளின் நடைமுறைகள் பற்றி இந்தக் கேள்வியானது கேட்கப்படுவதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அது போலவே, மற்றவர்களிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்கும் உரிமையை நான் பெற்றுள்ளேன் என்றும் நம்புகின்றேன்: "இவைகளை நீங்கள் எந்த அதிகாரத்தினால் செய்கின்றீர்கள்?"*

## "கிறிஸ்தவர்" என்ற பெயரைப் பயன்படுத்துவதற்கான அதிகாரம்

*சீஷர்கள் கிறிஸ்தவர்களென்று "அழைக்கப்பட்டனர்" (அப். 11:26). இந்தப் பெயரினாலே தேவனை மகிமைப் படுத்தும்படி பேதுரு நமக்குப் புத்தி கூறினார் (1 பேது. 4:16). எனவே தெய்வீக அதிகாரத்தினாலேயே நாம் இப்பெயரைத் தரித்துக் கொள்ளுகின்றோம். இப்பொழுது நீங்கள் தரித்துக் கொண்டுள்ள பெயரைப் பற்றி நான் அந்தக் கேள்வியைக் கேட்கட்டுமா?*

*நீங்கள் அதனைக் கிறிஸ்துவின் அதிகாரத்தினால் தரித்திருக்கின்றீர்களா? வேதவசனங்களில் எங்காவது அது காணப்படுகின்றதா?*

## இரட்சிப்பின் திட்டத்தைப் போதிப்பதற்கான அதிகாரம்

*இரட்சிப்பைக் குறித்து கிறிஸ்துவின் சபையார் போதிக்கையில், ஒவ்வொரு நபரும் மனிதத்துவப் பகுதியில் நிறைவேற்ற வேண்டியதைப் பெற்றிருப்பதாய்ப் போதிக்கின்றனர். இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர், விசுவாசித்து, தமது பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் தாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்பிற்காக ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்யப்பட வேண்டும். இந்தத் தேவைகளைப் பல வேதவசனப் பகுதிகள் போதிக்கின்றன. (உதாரணத்திற்கு, அப். 2:38 மற்றும் ரோமர் 10:10 ஆகியவற்றைக் காணவும்.) இவைகள் யாவும் இரட்சிப்பிற்கு “ஆனவைகள்” ஆகும்.*

*தேவனுடைய பிள்ளைகளாவதற்கு மனிதர் இவைகளைச் செய்ய வேண்டுமென்று போதிப்பதற்கு நாம் கிறிஸ்துவின் அதிகாரத்தைப் பெற்றுள்ளோம். “விசுவாசத்தினால் மட்டுமே” இரட்சிப்பு உண்டாகின்றது என்று எவரொருவரும் எந்த அதிகாரத்தினால் போதிக்க முடியும்? விசுவாசத்தினால் மட்டும் ஒருவர் நீதிமானாக்கப்பட முடியாது என்று யாக்கோபு தெளிவாகப் போதித்தார் (யாக். 2:24). விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு என்ற உபதேசமானது கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு நேரடியான எதிர்ப்புள்ளதாகும்.*

## முழுகுதலை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம்

*நாம் எந்த அதிகாரத்தினால் முழுகுதல் ஞானஸ்நானத்தை நடைமுறைப்படுத்துகின்றோம்? நாம் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட்டு மற்றும் உயிர்த்தெழுப்பப் படுகின்றோம் என்று பவுலின் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் போதித்தார் (ரோமர் 6:3, 4; கொலோ. 2:12). ஒரே ஞானஸ்நானமே உள்ளது என்று எபே. 4:5 எடுத்துரைக்கின்றது. மற்றவர்கள் எந்த அதிகாரத்தினால் தெளித்தல் அல்லது ஊற்றுதலைச் செய்து அதை ‘‘ஞானஸ்நானம்’’ என்று அழைக்கின்றனர்? இப்படிப்பட்ட நடைமுறைகள் நிச்சயமாகவே கிறிஸ்துவின் அதிகாரத்தினால் வந்தவைகள் அல்ல. அவர் ‘‘சகல அதிகாரமும்’’ பெற்றுள்ளார் என்பதை நினைவில் வையுங்கள். அவர் அதைப் போதிக்கவில்லையென்றால், அதற்கு தெய்வீக அதிகாரம் எதுவும் கிடையாது.*

## மனம் வருந்தும் விசுவாசிகளை மட்டும் ஞானஸ்நானப் படுத்துவதற்கான அதிகாரம்

*நாம் எந்த அதிகாரத்தினால் மனம் வருந்தும் விசுவாசிகளை மட்டும் ஞானஸ்நானப் படுத்துகின்றோம்? ஞானஸ்நானத்திற்கு முன்பு விசுவாசம் உண்டாக வேண்டும் என்று இயேசு போதித்தார் (மாற். 16:16). நடபடிகள் புத்தகத்தில், மக்கள் ஞானஸ்நானம் பெறுமுன் விசுவாசித்தார்கள் என்று நாம் வாசிக்கின்றோம் (அப். 8:12). ஞானஸ்நானத்திற்கு முன் மனந்திரும்புதல் உண்டாக வேண்டும் என்று பேதுரு போதித்தார் (அப். 2:38). சில குழுவினர் எந்த அதிகாரத்தினால் குழந்தைகளின்மேல் தெளிக்கின்றார்கள்? புதிய ஏற்பாட்டில் இதற்கான கட்டளையோ அல்லது உதாரணமோ இருக்கின்றதா? அப்படி ஒன்றும் இல்லையென்று நான் அறிகின்றேன். ஆகவே, குழந்தைகள்மீது தெளித்தல் என்பது கிறிஸ்துவின் அதிகாரத்தைப் பெற்றதல்ல.*

## ஆராதனையின் செயல்பாடுகளுக்கான அதிகாரம்

*புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாகிய நாம் கர்த்தருடைய நாளில் நமது ஆராதனையில் தேவனுடைய வசனத்தைப் போதித்து, நமது வருமானத்திலிருந்து காணிக்கை கொடுத்து, கர்த்தருடைய பந்தியில் பங்கேற்று, ஜெபம் செய்து மற்றும் பாடல்கள் பாடுகின்றோம். இவை எல்லாவற்றையும் நாம் எந்த அதிகாரத்தினால் செய்கின்றோம்? பாடல்கள் பாடுதல் தவிர மற்ற யாவும் அப். 2:42-47ல் குறிப்பிடப்பட்டுள்ளன, மற்றும் பாடல்கள் பாடுதல் பற்றி வேதாகமத்தில் வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (எபே. 5:19; கொலோ. 3:16). அப். 20:7ல் வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிடுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த அதிகாரத்தினால் இவைகளில் ஏதாவது ஒன்றை விட்டுவிட முடியும்? எந்த அதிகாரத்தினால் பாடல்களில் இசைக் கருவிகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றை ஒருவர் கூட்ட முடியும்? கிறிஸ்து இதற்கு அதிகாரம் அளித்துள்ளாரா? எவ்விடத்திலும் அவர் இதனைக் குறிப்பிடாததால், இதற்கு அவரது அதிகாரம் எதுவும் இல்லை.*

## முடிவுரை

*பரலோகத்தின் அதிகாரத்தைத் தனக்குப் பின்னால் கொண்டிராத நடைமுறை எதுவும் மனிதர்களால் உண்டானதாகவே இருக்க வேண்டும். நமது நடைமுறைகள் யாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினால் கொடுக்கப்பட்டவைகளாயிருப்பதை நாம் நிச்சயப் படுத்திக் கொள்ளுவோம்.*